Name of the Newspaper: Dinamani Date: 3-6-18

# மெட்ரோ ரயில் சேவை ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 6 மணிக்கே தொடங்கப்படும்

**சென்னை, ஜூன் 2:** சென்னையில் மெட்ரோ ரயில் சேவை இனி ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 6 மணி முதல் தொடங்கப்படுகிறது. இது ஜூன் 3-ஆம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது.

பயணிகள் வசதிக்காக, ஞாயிற்றுக்கிழமைகளில் மெட்ரோ ரயில் சேவை நேரம் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமைகளில் மெட்ரோ ரயில் இயக்க நேரம் காலை 6 மணிக்கு தொடங்கிவிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது, ஜூன் 3-ஆம் தேதி முதல் அமல்படுத்தப்படுகிறது.

மெட்ரோ ரயில் சேவை தொடங்கியபோது, திங்கள் முதல் சனிக்கிழமை வரை 6 நாள்களுக்கு தினமும் காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையும், ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரையும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வந்தன. தற்போது, பயணிகளின் வசதிக்காக, ஞாயிறுக்கிழமைகளிலும் காலை 6 மணி முதலே மெட்ரோ ரயில் சேவை இயக்கம் தொடங்கப்படுகிறது.

**தினமும் 55 ஆயிரம் பேர் பயணம்:** இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் கூறியது:

பயணிகளின் வலியுறுத்தலினால் மெட்ரோ ரயில் சேவை நேரம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இரு வழித்தடங்களில் தூரம் நீட்டிக்கப்பட்ட பின்னர், பயணிகள் எண்ணிக்கை ஒரு லட்சமாக உயரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்போது தினமும் சராசரியாக 55 ஆயிரம் பேர் வரை பயணிக்கின்றனர். பொதுமக்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பது மூலமாக இந்த எண்ணிக்கை உயரும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

மெட்ரோ ரயில் சேவையை சென்ட்ரல்-நேரு பூங்கா, தேனாம்பேட்டை டி.எம்.எஸ்.-சின்னமலை இடையே தொடங்குவதற்கு முன்னதாக, தினமும் 30 ஆயிரம் பேர் பயணம் செய்தனர். இப்போது, நாள்தோறும் சராசரியாக 55,000 பேர் பயணிக்கின்றனர்.